## திருநெல்வேலி மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்த

# தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 25– திருநெல்வேலி மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்த தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதோடு நிதியுதவியும் வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:–

நாங்குநேரி சுங்கச்சாவடி அருகே நேற்று முன்தினம் (23.8.2023) இரவு நடந்த சாலைவிபத்தில், திருநெல்வேலி மாவட்டம், ஆரைகுளம், முன்னீர்பள்ளத்தைச் சேர்ந்த தனியார் தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் சங்கர் (வயது 33) என்பவர், சந்திரயான் விண்கலம் தொடர்பான செய்திக்காக திருவனந்தபுரம் சென்று திருநெல்வேலி திரும்பும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும் இவ்விபத்தில் படுகாய மடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மூன்று நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

இளம் வயதில் உயிரிழந்த தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் சங்கர் அவர்களது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு ஐந்து இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மூன்று நபர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் முதன்முறையாக - மாநில இளைஞர் திருவிழா!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக.26- இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் ஒருங்கிணைப்பில் தமிழ்நாடு மாநில நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் மாநில இளைஞர் திருவிழா 2023 ஆகஸ்ட் 24 முதல் 28 வரை ஐந்து நாட்கள் சென்னையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வின் தொடக்க விழா சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று முன்தினம் (24.08.2023) நடைபெற்றது. இந்த விழாவினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

விழாவில் மாநில இளைஞர் திருவிழாவிற்கான இலச்சினையினை வெளியிட்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை தமிழ்நாடு மாநில நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் முதல் முறையாக நடைபெறுகின்ற மாநில இளைஞர் திருவிழாவினை தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உலகிலேயே இளைஞர்களை அதிகம் கொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்திய ஒன்றியத்தில் இளைஞர்களை அதிகம் கொண்ட 10 மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாக உள்ளது. வெறும் எண்ணிக்கை என்ற அளவில் மட்டுமல்லாமல் இங்கு இருக்கின்ற இளைஞர்கள், இளம் பெண்கள் திறமைசாலி களாகவும், தனித்துவம்மிக்கவர்களாகவும் இருக்கின்றார்கள். அதனால்தான் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும் போது தமிழ்நாடு முற்போக்கு மாநிலமாக, முதன்மை மாநிலமாக விளங்கி கொண்டிருக்கின்றது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967ஆம் ஆண்டு முதல்முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆன போது பேரறிஞர் அண்ணா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது தான் சீரணி. சென்னை கடற்கரையில் இருந்த சீரணி அரங்கம் தற்போது இல்லை. நாட்டு நலப்பணித்திட்டங்களுக்கு எல்லாம் முன்னோடியாக பேரறிஞர் அண்ணா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது தான் சீரணி. இதனை சொல்வதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சராக பெருமை கொள்கிறேன். பொதுவாக ஒவ்வொரு துறையை சேர்ந்தவர்களுக்கும் ஒவ்வொரு பொறுப்பு இருக்கும். உதாரணத்திற்கு காவல்துறையைச் சார்ந்தவர்களுக்கு மக்களை பாதுகாக்கின்ற பொறுப்பும், மருத்துவர்களுக்கு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கின்ற பொறுப்பும், ஆசிரியர்களுக்கு கல்வி கற்பிக்கின்ற பொறுப்பும் இருக்கும். ஆனால் நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர்களுக்கு மட்டும் இதற்கெல்லாம் விதிவிலக்காக எல்லாத் துறைகளிலும் பங்களிப்பு இருக்கும்.

மரக்கன்றுகள் நடும் நிகழ்வாக இருக்கட்டும், புயல் மழைக் காலங்கள், இயற்கை பேரிடர் காலங்களில் மீட்பு பணியில் ஈடுபடுவதும் நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்கள் தான். குறிப்பிட்டு சொல்வதென்றால் கொரோனா காலத்தில் உங்கள் சேவை சாதாரணமானது அல்ல, உயிரையும் பொருட்படுத்தாமல் கொரோனா ஒழிப்பு பணியில் ஈடுபட்டு கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துணை நின்று அவர்களது குடும்பத்தாருக்கு அத்தனை தன்னார்வலர்களும் அனைத்து உதவிகளையும் செய்தீர்கள். இந்தியாவிற்கு முன்மாதிரியாக உங்களது பணி இருந்தது. கொரோனாவில் இருந்து தமிழ்நாட்டை மீட்க தமிழ்நாடு அரசுக்கு பக்கபலமாக இருந்தீர்கள். தமிழ்நாட்டை போதையற்ற மாநிலமாக மாற்ற வேண்டும் என்பதுதான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இலக்கு.

போதைப் பொருள் ஒழிப்பிற்காக தன்னார்வலர்கள் ஆகிய நீங்கள் மிகப் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறீர்கள். சுதந்திர தின கொண்டாட்டம், அரசியலமைப்பு தினம், யோகா தினம், தூய்மை இந்தியா திட்டம் ஆகியவற்றிலும் சிறப்பாக பங்கேற்று வருகிறீர்கள். பல்வேறு சமூக நலப் பணிகளில் ஈடுபட்டு வருகின்ற உங்களிடம் விளையாட்டுத் துறை அமைச்சராக ஒரு கோரிக்கையினை முன் வைக்கின்றேன். கல்வி மட்டும் தான் நம்மிடமிருந்து பிரிக்க முடியாத, அழிக்க முடியாத ஒன்று என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். அனைவரும் கல்வியில் முழுக் கவனம் செலுத்த வேண்டும். கல்வியுடன் பிடித்த விளையாட்டிலும் கவனம் செலுத்த வேண்டும்.

தகவல் தொழில்நுட்பம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. சமூக வலைதளங்களான டிவிட்டர், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் ஆகிய பல்வேறு தளங்களில் இருப்பவர்கள் ஒரு விஷயத்தையோ, பதிப்பையோ, புகைப்படத்தையோ, பார்க்கும் போது அதை பகுத்தறிவு கொண்டு உண்மையானது தானா என யோசித்து பார்க்க வேண்டும். பெரியார் அவர்கள் எந்த விஷயத்தையும் யார் சொல்லி இருந்தாலும், எங்க படித்திருந்தாலும், நானே சொன்னாலும், உனது புத்திக்கும், அறிவுக்கும் பொருந்தாத எதையும், நம்ப வேண்டாம் எனக் கூறியுள்ளார். அதை கடைபிடியுங்கள். எந்த ஒரு செய்தியையும் பிறருக்கு பகிர்வதற்கு முன்பு அதைக் கேள்விக்கு உட்படுத்தி உண்மைதானா என உறுதி செய்து கொண்டு பகிர வேண்டும். யார் எதைச் சொன்னாலும் உடனே நம்பாதீர்கள், கேள்வி கேளுங்கள், பெற்றவர்களைத் தவிர யார் எதை சொன்னாலும் கேள்வி கேளுங்கள். ஒரு சின்ன வதந்தி, தவறான தகவல்கள் தான் பிரச்சினைகளை உருவாக்குகிறது.

ஆகவே எல்லோரும் பொறுப்புடன் சமூக வலைத்தளங்களை பயன்படுத்திட வேண்டும். குடியரசு தின அணிவகுப்பிற்காக நாட்டு நலபணித்திட்டம், தேசிய மாணவர் படை, தன்னார்வலர்கள் டெல்லிக்கு சென்று வருகின்றீர்கள். டெல்லிக்கு செல்ல தற்போது இரயில் டிக்கெட் மட்டும் எடுத்து தரப்பட்டு வருகிறது. இரயில் மூலம் பயணம் செய்ய இரண்டு மூன்று தினங்கள் ஆகிறது. இதனை கருத்தில் கொண்டு விமானம் மூலம் சென்று வர ஆவன செய்ய வேண்டுமென அனைவரும் கோரிக்கை விடுத்து வருகின்றீர்கள். எதிர்வரும் குடியரசு தின அணிவகுப்பிற்கு என்.எஸ்.எஸ். மற்றும். என்.சி.சி. தன்னார்வலர்கள் விமானம் மூலம் சென்றுவர ஏற்பாடு செய்து தரப்படும்.

நாட்டு நலப் பணித் திட்ட செயல்பாடுகள், மாநில இளைஞர் திருவிழா, மாநில சாகச முகாம்கள், தேசிய ஒருமைப் பாட்டு முகாம், புதுமைப் பெண் திட்டம், மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு முகாம், தேசிய பேரிடர் மேலாண்மை ஆகிய சிறப்பு செயல்பாடுகளுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, முதன் முறையாக. ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. அந்த நிதி ஒதுக்கீட்டின் ஒரு பகுதியாகத் தான் முதல் மாநில இளைஞர் திருவிழா தொடங்கியுள்ளோம்.

மாநில இளைஞர் திருவிழாவின் ஒரு பகுதியாக மாணவர்களுடைய தனித்திறன்களை வெளிக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இதில் கல்விசார் அரங்கு, கலைத்திறன் போட்டிகள், நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள், நாடகம், ஓவியப் போட்டி, புகைப்படக் கண்காட்சி, விவாத அரங்கம், குறும்பட போட்டிகள், சுவர் ஓவியங்கள் மற்றும் உடை அலங்கார போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற உள்ளது. இந்த அனைத்து நிகழ்வுகளும் சென்னையில் உள்ள விஐடி பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறும். இந்தப் போட்டிகளில் பங்கேற்கின்ற இளைஞர்கள் தங்கள் திறமைகளை பயன்படுத்தி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் (ஆயிரம் விளக்கு) டாக்டர்.நா.எழிலன், (எழும்பூர்) இ.பரந்தாமன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, கல்லூரி கல்வி இயக்குநர் முனைவர். கீதா, மாநில நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர். செந்தில் குமார் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## ஆட்சிப் பொறுப்பேற்றபின்

# 918 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது!

## அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!



மயிலாடுதுறை, ஆக.26- முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் நேற்று முன்தினம் (24.8.2023) மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை மாயூரநாத சுவாமி திருக்கோயி லில் ரூ.9 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப் பட்டு திருக்குட முழுக்கு நடைபெறுவதை முன்னிட்டு, அங்கு நிறைவு பெற்றுள்ள திருப்பணி களையும், மேற்கொள்ளப் பட்டுள்ள முன்னேற்பாடு பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனைத்தொடர்ந்து சீர்காழி, சட்டநாதர் திருக்கோயில் வளாகத்தில் கண்டெடுக்கப்பட்டு திருக்கோயி லிலேயே பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ள பல அரிய செப்பேடுகள், உலோக திருமேனிகள் மற்றும் பூஜை பொருட்களை நேரில் பார்வையிட்டார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் இன்று மாலை தருமபுரம் ஆதீனத்தின் முப்பெரும் விழாவில் பங்கேற்று சிறப்பு சேர்க்க உள்ளார்கள். அந்த இனிய நிகழ்வில் பங்கேற்கும் வேளையில் வருகின்ற செப்டம்பர் மாதம் மூன்றாம் தேதி திருக்குடமுழுக்கு நடைபெறவுள்ள மயிலாடுதுறை, அருள்மிகு மாயூரநாதர் சுவாமி திருக்கோயில் மற்றும் துக்காச்சி, அருள்மிகு சௌந்தர்யநாயகி அம்பாள் உடனுறை ஆபத்சகாயேசுவரர் திருக்கோயிலில் நிறைவு பெற்றுள்ள திருப்பணி களையும், திருக்குடமுழுக்கிற்காக மேற்கொள்ளப் பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளையும் ஆய்வு செய்தோம்.

மயிலாடுதுறை, மயூரநாதர் சுவாமி திருக்கோயிலுக்கு 18 ஆண்டுகளுக்குப் பிறகு இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ. 2 கோடி மற்றும் உபயதாரர்கள் மூலம் ரூ.7 கோடி ஆக மொத்தம் ரூ. 9 கோடி மதிப்பீட்டிலும், துக்காச்சி, அருள்மிகு சௌந்தர்யநாயகி அம்பாள் உடனுறை ஆபத்சகாயேசுவரர் திருக்கோயிலுக்கு ரூ.3.66 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இரண்டு திருக் கோயில்களுக்கும் வரும் மூன்றாம் தேதி குடமுழுக்கு நடைபெற இருக்கின்றன. துக்காச்சி திருக்கோயிலை பொறுத்தளவில் இதற்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்றதுக்கு உண்டான எந்த சான்றும் இல்லை. தகவல் சேகரிக்க முற்பட்டபோது கடந்த 50 ஆண்டுகளுக்குள் குடமுழுக்கு நடைபெற்றதாக எந்த விதமான சான்றும் கிடைக்கப்பெறவில்லை.

புதிதாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் இதுவரையில் 918 திருக்கோயில்கள் குடமுழுக்கு நடைபெற்று இருக்கின்றது. அதில் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு அருள்மிகு ஆதிகேச பெருமாள் திருக்கோயில் 400 ஆண்டுகளுக்கு பிறகும், காஞ்சிபுரம் மாவட்டம், சாத்தனஞ்சேரி அருள்மிகு கரியமாணிக்க வரதராஜ பெருமாள் திருக்கோயில் சுமார் 300 ஆண்டுகளுக்கு பிறகும் இந்த ஆட்சியில் தான் குடமுழுக்கு நடைபெற்று இருக்கின்றது. மேலும் 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சுமார் 30க்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் குடமுழுக்குகள் நடைபெற்றுள்ளது. தருமபுர ஆதீனத்தில் இருக்கின்ற 27 திருக்கோயில்களில் 23 திருக்கோயில்களுக்கு இரண்டு ஆண்டுகளில் குடமுழுக்கு நடத்திட அனுமதி அளிக்கப் பட்டு திருப்பணிகள் நிறைவுற்று குடமுழுக்கு முடிந்திருப்பதும் ஒரு வரலாற்று சிறப்பாகும்.

சீர்காழி, சட்டநாதர் திருக்கோயிலுக்கு 32 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த மாதம் குடமுழுக்கு நடைபெற்றது. ஆண்டாண்டு காலமாக குடமுழுக்கு நடைபெறாத திருக்கோயில்களை எல்லாம் கண்டறிந்து குடமுழுக்கு பணிகள் விரைவுபடுத்தப்பட்டு தெய்வங்கள் மகிழ்ச்சியோடு இருக்கின்ற ஆட்சியாக இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான ஆட்சி நடந்து கொண்டிருக்கின்றது. அருள்மிகு சட்டநாதர் திருக்கோயில் குடமுழுக்கு பணிகளுக்காக மராமத்து பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு பள்ளம் தோண்டிய போது பல அரிய செப்பேடுகளும், உலோக திருமேனிகளும், பூஜை பொருட்களும் கிடைத்திருக்கின்றன. அதில் 410 செப்பேடுகள் முழுமையாகவும், 83 செப்பேடுகள் சிதலமடைந்த தும், 23 உலோக திருமேனிகள் முழு அளவிலும், 13 பூஜை பொருட்களும் கிடைத்திருக்கின்றன. இதுவரையில் தேவாரங்கள் ஓலைச்சுவடிகள் தான் கிடைத்துள்ளன. முதன் முதலில் இங்குதான் செப்பேடுகளில் தேவாரம் பாடல்கள் கிடைத்துள்ளது. இது தமிழகத்தின் வரலாறாகும். இவை பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன. செப்பேடுகளில் மொழிபெயர்க்க வேண்டிய பாடல்கள் அரிய பாடல்கள் இருப்பதால், தொல்லியல் துறையோடு கலந்தாலோசித்து அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். இதில் முதலமைச்சர் அவர்கள் தகுந்த நல்ல முடிவினை எடுப்பார்கள்.

மேலும் பல செப்பேடுகள் இருப்பதாக தொல்லியல் துறை தெரிவித்துள்ளதை கருத்தில் கொண்டு, அவற்றையும் எடுப்பதற்கு உண்டான முயற்சிகளை முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையோடு மேற்கொள்ளப்படும். ஒட்டுமொத்தமாக இந்த ஆட்சியானது ஆன்மீக புரட்சிக்கு வித்திடுகின்ற ஆட்சியாகவும், ஆன்மீகவாதிகள், இறை அன்பர்கள், மடாதிபதிகள், சன்னிதானங்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு இருக்கின்ற ஆட்சியாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ளகை.வீ.முரளீதரன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி, நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா எம்.முருகன், எம். பன்னீர்செல்வம், இணை ஆணையர் எஸ்.மோகன சுந்தரம், உதவி ஆணையர் ஆர்.முத்துராமன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சந்திரயான் மூன்றின் வெற்றி வியப்பின் வியப்பே!

# வெற்றித் தமிழர் வீரமுத்துவேலுக்கு தமிழ்நாடு முதன்மை முதல்வர் பாராட்டு!

வியத்தொறும் வியத்தொறும் வியப்பே!
வியப்பே! செயல்சமை சந்திரயான்
மூன்று விண்கலம்

உன்னத 'இஸ்ரோ' ஒளிதிகழ் அறிவியல்
நன்றுவெல் மேதைகள் நாட்டிய முயற்சியால்

தடம்பதித் ததுவே 'விக்ரம் லேண்டர்'
இடம்பதி நிலவியல் தென்துரு வத்திலே!

இந்தியக் கொடியை இறும்பூ தெய்திட
விந்தை நாட்டியே! வென்றதென்!வென்றதென்!

உலக அரங்கில் வரலாறு படைத்ததே
நிலவரைப் பாரதம் தலைநிமிர்ந் ததுவே!

வல்லரசு களெலாம் வாழ்த்திட அறிவியலார்
வெல்லுபே ராற்றலோ வியப்பிலும் வியப்பே!

'ஒரே ஒரே' என்றார் ஒன்றியம் எல்லாம் ஒரே
உலகு ஆளுமை நிலமெலாம் மகிழ்ந்ததே!

தேடறிய உறுதித் திறம்அறம் வென்றதென்?

'ஈடிலா அறிவியல் 'இசுரோ'விஞ் ஞானிகள்

மேதைகள் நுட்பம் 'உரோவர்' நல்வழிப்
பாதைகள் தேர்ந்து நிலாக்களம் ஆய்ந்ததென்?

சுற்றுப் பாதைகள் சுற்றிச் சுற்றியே
கற்றவர் அடங்கள்போல் கண்டதே அதிசயம்!

உத்வே கத்தின் உச்சம் தொட்டதே! ஒத்திசை
அறிவியல் உலகம் ஓங்குக!

சிவன்மயில் வனிதா முத்துவேல் தமிழரே
தவவீர முத்துவேல் இயக்குநர் இன்றே!

சோமநாத் தலைவர் சுடர்பணி இணைந்தே
மாமதி நம்பிக்கை மாநிலம் நிலைத்ததே

"யானெனின் இலக்கை அடைந்தேன் நீங்களும்
தானென 'விக்ரம் லேண்டர்' தகவலோ

வையகச் செவியெலாம் மகிழ்வின் எல்லையே
கையகம் நிலாவியல் களப்பணி வாகையே!

கூட்டு முயற்சியின் அறிவியல் வெற்றியே!
நாட்டொற் றுமைக்கும் நல்ல படிப்பினை!

மூன்றுசந் திரயான் முழுமைப் பணிக்கும்
வான்நில(வு) இயல்வெளித் திட்டஇயக்
குனர்களோ

மூவரும் தமிழரே! முழுமைப் பணிக்கெலாம்
யாவரும் மகிழ்வதோ தமிழ்நாட் டுடைத்தே!

இனத்தமிழ் நாட்டுடை முதன்மை முதல்வர்

மனநெகிழ்ச்சி உந்திட 'சந்திரயான் மூன்றில்

திட்டத்(து) இயக்குநர் செந்தமிழ் அறிவியற்
கட்டுப்பாட் டுரிமைக் காவலர் இணையிலா

வீரமுத்து வேலினை வியந்துபா ராட்டினரே!

ஆரமுதம் தமிழரெலாம் அருந்திய உவப்பிதே!

இந்திய அறிவியல் இணையிலா மேதைகள்
விந்தை 'இசுரோ' வெற்றிச் சரித்திரம்

தேசமே வணங்கி வாழ்த்துமே!

வாசல் திறந்துவான் மலர்கள் தூவுமே!



பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**
(உலக அமைப்பாளர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்)

## ஒரு மாதமாகப் பெய்யும் கனமழை

# இமாச்சலத்தில் நிலச்சரிவு - சரிந்துவிழும் வீடுகள்!

## 300க்கும் மேற்பட்டோர் பலி!



குல்லு, ஆக. 26- இமாச்சல பிரதேசத்தில் நிலச்சரிவு காரணமாக ஏராளமான வீடுகள் சீட்டுக் கட்டு போல இடிந்து விழும் பரபரப்பு காட்சிகள் வெளியாகியுள்ளன.

இமாச்சல பிரதேசத்தில் கடந்த ஒரு மாதமாக பெய்யும் கனமழை காரணமாக வெள்ளப் பெருக்கும், தொடர் நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. இந்த இயற்கை பாதிப்புக்கு இதுவரை 300க்கும் மேற்பட்டோர் பலியாகி விட்டனர். மேலும் பலரை காணவில்லை.

இந்நிலையில் குல்லு மாவட்டம் அன்னி நகரில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் மலையோரத்தில் இருந்த ஏராளமான வீடுகள் இடிந்து சீட்டுக்கட்டு போல சரிந்தன.

நிலச்சரிவு நடைபெற்ற இடத்தில் மீட்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இடிந்து விழுந்த வீடுகளினால் உயிரிழப்பு எதுவும் ஏற்பட்டதா, யாரும் காயம் அடைந்தனரா என்பது குறித்து தகவல் இதுவரை வெளியாகவில்லை.

**தேசிய பேரழிவாக அறிவிக்க காங்கிரஸ் கோரிக்கை!**

இமாச்சல பிரதேச மாநிலத்தில் இடைவிடாமல் பெய்யும் கனமழையால், பல இடங்களில் வெள்ளப் பெருக்கும், நிலச்சரிவுகளும் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராஜீவ் சுக்லா, 3 முறை இடை விடாமல் பெய்த கனமழையினால் இமாச்சல பிரதேசத்தில் பேரழிவு ஏற்பட்டிருப்பதாகவும், இதுவரை கனமழை, நிலச்சரிவுக்கு 330 பேர் உயிரிழந்து இருப்பதாகவும், 35 பேர் காணாமல் போயிருப்பதாகவும், 12 ஆயிரம் வீடுகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்தார்.

இயற்கை பாதிப்புக்கு இதுவரை 13 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் , ஆனால் ஒன்றிய அரசோ வெறும் 200 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியிருப்பதாகவும் அவர் விமர்சித்தார்.

இமாச்சலில் ஏற்பட்டுள்ள பாதிப்பைசரிசெய்யும்பணியை அரசியல் கண்ணோட்டத்தில் அணுகக் கூடாது, உடனடியாக இமாச்சலுக்கு ஒன்றிய அரசு 10 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்றும் ராஜீவ் சுக்லா கேட்டு கொண்டார்.



கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டம் திருவாரூர் மாவட்டம் திருக்குவளை பள்ளியில் தொடங்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஒசூர் சட்டமன்ற தொகுதி ஒசூர் ஊராட்சி ஒன்றியம் பூனப்பள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளி மாணவர்களுடன் அமர்ந்து உணவு உட்கொண்டு இத்திட்டத்தினை மாவட்ட செயலாளர் ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர், தளி ஒன்றிய குழு தலைவர் சீனிவாசுலு ரெட்டி, அரசு அதிகாரிகள், ஒன்றிய குழு உறுப்பினர் பிரபாகர்,ஊராட்சி மன்ற தலைவர் பைரப்பா, துணை தலைவர், வார்டு உறுப்பினர்கள், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் மஞ்சுநாத், முன்னாள் துணை தலைவர் சசி, மாணவர்கள், இருபால் ஆசிரியர்கள், கழக தோழர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## 'வாட்ஸ் அப்'பில் வரும் செய்தி!

